Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி - 24 | 09-08-2003 | சனிக்கிழமை | ஓசை 172


R/A: Nelsan Yasarathne
T.P: 024 - 23318
NELSON LEARNERS
(Government Approved "A" Grade Driving School)
Reg No :D.S.242
சிறிய வாகனம் முதல் பெரிய வாகனம் வரை பயிற்சிகொடுத்து லைசன்ஸ் கொடுக்கப்படும்.
கிளை: வவுனியா, யாழ்ப்பாணம். (இ-8246)
No:86, Bus Stand Complex Vavuniya.

# புலிகளின் சட்ட நிபுணர்கள் குழு

# இரு வாரங்களுக்குள் ஐரோ.வில் கூடும்

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அடுத்த கட்டம் குறித்தும் ஆராயும்

(கிளிநொச்சி)

**இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன்வைத்த திட்டவரைவு குறித்து விடுதலைப்புலிகளின் சட்ட நிபுணர்கள் குழு இருவாரங்களுக்குள் ஐரோப்பிய நாடொன்றில் கூடி ஆராயவுள்ளதாக புலிகள் தரப்பில் இருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள் கூறுகின்றன.**

அரசாங்கம் சமர்ப்பித்த திட்டவரைபினை ஆராய்ந்து வரும் விடுதலைப்புலிகளின் சட்ட நிபுணர்கள் குழு உலகின் ஏனைய பாகங்களிலும் பரந்துள்ள தமிழ் சட்ட வல்லுநர்களையும், துறைசார் நிபுணர்களையும் அழைத்து இத்திட்ட வரைவின் அடுத்த கட்டம் குறித்து ஆராயவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்த யோசனைகளைத் தீவிரமாக ஆராய்ந்துவரும் விடுதலைப்புலிகள் - இவ்வகைத் திட்டத்தில் இடம்பெற வேண்டிய புதிய யோசனைகளையும், மாற்றுத்திட்டத்தினையும் அரசிற்கு சமர்ப்பிக்கப் போவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

இந்நிலையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நகல் திட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து ஐரோப்பாவில் கூடவுள்ள குழு தீவிரமாகப் பரிசீலிக்கும் எனத் தெரியவருகின்றது.

விடுதலைப்புலிகளின் இச்சட்ட நிபுணர்கள் குழு கூட்டம் சுமார் ஒருவார காலம் வரையில் நீடிக்கலாமெனவும் தெரியவருகின்றது.

இதேவேளை விடுதலைப்புலிகள் இவ் ஆலோசனைக் கூட்டம் பெரும்பாலும் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## சமாதான முயற்சிகளை மீள ஆரம்பித்தல்

## யசுகி அகாசி மீண்டும் வருகை!

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் பொருட்டு இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் யசுகி அகாசி இலங்கை செல்லவிருப்பதாக ஜப்பானின் துணை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கான தனது பயணத்தை முடித்துக் கொண்டு ஜப்பான் சென்ற அவர் டோக்கியோவில் செய்தியாளர் மாநாட்டில் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார். ஆனால் அகாசியின் பயணம் குறித்து மேலதிக விபரங்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மலேரியாக் கொசுக்களை அழிக்க விசேட கொசுவலைகள்!

(கொழும்பு)

மலேரியாக் கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு புதிதாக கொசு வலை மலேரியா கட்டுப்பாட்டுச்சபை கண்டுபிடித்துள்ளது.

இந்த கொசு வலை பர்மித்திரின் என்ற இரசாயன மருந்தை உபயோகித்து தயார் செய்யப்பட்டுள்ளது. மலேரியா கொசுக்கள் சிக்கினால் உடன் இறந்துவிடும். நான்கு வருடங்கள் அல்லது ஐந்து வருடங்கள் இந்தக் கொசு வலையைப் பாவிக்கலாம். மேலும் எதிர்காலத்தில் மலேரியா பூச்சிக்கொல்லி மருந்தைத் தெளிப்பதைப் படிப்படியாக நிறுத்துவதற்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்றில் மிக அபாயகரமான காலத்தை இலங்கை எதிர் நோக்கி வருகின்றது!

### சனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் மிகவும் அபாயகரமான காலத்தை எதிர் நோக்கி வருகின்றது என்று சனாதிபதி தெரிவித்துள்ளார். நாட்டின் ஆட்சியாளர் ஒருவர் நாட்டின் ஒரு பகுதியை மற்றொருவருக்குக் கையளிக்கத் தயாராவது இதுவே முதல் தடவையாகும். போலியான சமாதானத் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கின்றது. ஈழம் என்ற சொல்லை உபயோகிக்காது தமிழீழ விடுதலைப் புலிகளிடம் நாட்டின் ஒரு பகுதியைக் கையளிப்பதற்குப் பிரதமர் முயற்சி செய்கின்றார்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான போது நாம் அதற்கு முழுமையான ஆதரவு வழங்குவதாகவும் இச்சமாதானம் தொடர்பாகத் தன்னுடன் கலந்துரையாட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதாகவும் கூறினார். தமிழீழ விடுதலைப்புலிகளிடம் நாட்டின் ஒரு பகுதியைக் கையளிப்பதற்கு நோக்கம் கொண்டிருப்பது பற்றிப் பிரதமர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உள்துறை அமைச்சருடன் பொலிஸ்மா அதிபரும் யாழ். செல்வார்

(கொழும்பு)

சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட குழுவினர் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

உள்துறை அமைச்சர் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவுடன் உள்துறை அமைச்சின் செயலாளர் யுனைட், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் டிவாரியா, பிரதமரின் ஆலோசகர் ஆகியோரும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக உள்துறை அமைச்சு விடுத்திருக்கும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். செல்லும் இவர் யாழ் நூலகம், நல்லூர் கந்தன் ஆலயம், யாழ். பொலிஸ் நிலையம், யாழ்.சிறைச்சாலை ஆகியவற்றுக்கும் செல்லவுள்ளார்.

## நூர்தீன் மசூர், அப்ரத் மீண்டும் சிறி. முஸ்லிம் காங்கிரசில்?

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்ற வன்னிப் பிராந்திய புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அப்ரத் ஆகியோர் மீண்டும் முஸ்லிம் காங்கிரசில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான பேச்சுக்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் இவர்களுக்கும் இடையில் நடைபெற்று வருகிறது.

அதாவுல்லா தலைமையிலான தனிக்குழுவாக செயற்பட்டு வந்த இவர்கள் இடைக்கால நிர்வாக சபை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்கண்காணிப்பிற்கான அதிகாரம் கடற்புலிகளுக்கு வழங்கப்படவேண்டும்!

### - யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சூசைஆனந்தன்

வடக்குக் கிழக்குக் கடற்பிராந்தியத்தில் தமிழ் மக்களுக்கு உரித்தான இறைமையைப் பேணுவதற்காக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் ஊடாக கடற்புலிகளுக்கு கடற் கண்காணிப்புக்கான அதிகாரத்தையும் அனுமதியையும் வழங்க வேண்டுமென யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன் தெரிவித்துள்ளார். அவர் நிகழ்வில் மேலும் பேசுகையில், தமிழினத்தினை அடக்கியாளும் நோக்குடன் தொடர்ந்தும் ஆட்சிபீடம் ஏறும் சிங்கள இனவாத அரசும் அதன் கூலிப்படைகளும் என்றுமே எம் கடல்வளம் சுரண்டப்படுவதைக் கண்டும் காணாமல் இருப்பதுடன் இந்திய ரோலர்களை ஊடுருவவிட்டு அவர்களுடன் தமிழ் மீனவர்கள் மோதிக் கொள்ளக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கி அதன் ஊடாகத் தாம் அரசியல் இலாபத்தில் ஈடுபடுவது குறித்தும் மீனவர் சமூகம் மீது மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

அத்துடன் சிறிலங்காக் கடற்படையினர் பாஸ்நடைமுறைகள் சோதனைக் கெடுபிடிகள் என்று பல

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விசா காலாவதியான 14 இந். பிரஜைகள் தடுத்துவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டு. கல்முனை, பாண்டிருப்பு ஆகிய இடங்களில் விசா காலாவதியான நிலையில் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இந்திய பிரஜைகள் 14 பேரை இம்மாதம் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அம்பாறையில் இருந்து வருகை தந்த விசேட பொலிஸ் குழு நீதவானின் தேடுதல் உத்தரவைப் பெற்று பதிவைந்து இந்திய பிரஜை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம் புலிகள் - அரசுக்கிடையிலானது

### - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதித் தலைவர்

திருமலை கிண்ணியா குரங்குபாஞ்சான் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் முகாம் தொடர்பான பிரச்சினை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான விவகாரம் என்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் சொக்லெண்ட் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; இதுதொடர்பாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

### - குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம் -

## அமெரிக்காவின் அதிருப்தி குறித்து விடுதலைப் புலிகள் கவலை

(கிளிநொச்சி)

திருமலை மாவட்டம் குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அமெரிக்கா வெளியிட்டுள்ள அதிருப்தி குறித்து விடுதலைப்புலிகள் கவலை கொண்டுள்ளதாக புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

குரங்குபாஞ்சான் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைந்துள்ளதெனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தொடர்பானவரைபடத்தில் குரங்கு பாஞ்சான் உள்ளடங்கப்பட்டுள்ளதாகவும், விடுதலைப் புலிகளின் வித்துடல்கள் அப்பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கும் விடுதலைப்புலிகளின் தரப்பு

போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு ஒரு தலைப்பட்சமாக மேற்கொண்ட முடிவினை ஆதாரமாகக்கொண்டு அமெரிக்காவும் விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்தி அறிக்கை வெளியிட்டுள்ளமை குறித்து. விடுதலைப்புலிகள் தரப்பு கவலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

விஸ்வலிங்கம் ஐங்கரசோதி, கணுக்கேணி கிழக்கு முள்ளியவளை எனும் முகவரி கொண்ட எனது அ.அ. இல. 801662498V புளியங்குளத்திற்கும் முள்ளியவளைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (3476)

### தவறிவிட்டது

அருந்தவராசா கேதீஸ்வரன் என்வருடைய தேசிய அடையாள அட்டையும் (772142994v) வங்கி அட்டை(Cat Card) முறிகண்டிக்கும் புளியங்குளத்துக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சேவாலங்கா மன்றம் கிளிநொச்சி அல்லது கனகராயன்குளம் அலுவலகத்தில்ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் சன்மானம் வழங்கப்படும். (3618)


# வாழைச்சேனை நகரின் அபிவிருத்திக்கு ரூ.6 கோடி

வாழைச்சேனை நகரம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இரண்டு ஆண்டுகளில் மூன்று கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளஇவ் வேலைத் திட்டத்திற்காக அரசு சுமார் 45 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது.

கடற்றொழில் சமுத்திரவளங்களின் பிரதியமைச்சர் முகதீன் அப்துல்காதரின் வேண்டுகோளிற்கமைய ரணில்இதற்கானஇணக்கத்தை தெரிவித்துள்ளார். கடந்தகாலபோரினால் வாழைச்சேனை நகரமும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தையல் பயிற்சி ஆரம்பம்

## பயில விரும்புவோர் விண்ணப்பிக்குக

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் கடந்த ஐந்தாம் திகதி முதல் தையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப் பெற்று வருகின்றன.

மேற்படி பயிற்சி நெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளவர்கள், மற்றும் தையல் பயிற்சிக்க விண்ணப்பிக்கவுள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாகக் கிளிமாவட்ட இலங்கை செஞ்சலுவைச் சங்கப் பணிமனைக்குச் சமூகம் அளித்துத் தையல் பயிற்சியினை மேற்கொள்ளும் வண்ணம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளிமாவட்டக் கிளை செயலர் க.கணேஸ் வேண்டியுள்ளார். (சோ)

# காவல்துறை நடவடிக்கை

## கசிப்பு வைத்திருந்த இருவர் கைது!

வட்டக்கச்சிப் பகுதியில் கசிப்பு விற்பனையை முற்றாக ஒழிக்கும் இலக்குடன் வட்டக்கச்சிப் பிரதேச காவல் பணிமனையினர் தீவிர கசிப்பு வேட்டையை நடத்தி வருகின்றனர்.

இதனடிப்படையில் கடந்த மாதம் 29 ஆம் திகதியன்று ஒன்றரை லீற்றர் கசிப்பினை வைத்திருந்த சந்தேக நபரும்,30ஆம்திகதி அரை லீற்றர் கசிப்பினை வைத்திருந்த சந்தேக நபரும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட போது ஒன்றரை லீற்றர் கசிப்பினை வைத்திருந்த நபருக்கு ஒரு வருடகாலம் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதகால சிறைத்தண்டனையும், தண்டப்பணம் 6000 ரூபா செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அரை லீற்றர் கசிப்பினை வைத்திருந்த நபருக்கு ஒருமாத சிறையை06 மாதம் ஒத்திவைக்கப்பட்ட சிறையாகவும் அத்துடன் தண்டப்பணம் 2500ரூபாவாக செலுத்தவேண்டும் என்றும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (12)

- கிளி.மாவட்.கூ.சங்கங்களின் ஒன்றியம் -

# பாரிய நெல் குற்றும் ஆலை அமைக்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தினால் கிளிநொச்சியில் பாரிய நெல் குற்றும் ஆலையினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி நெல் குற்றும் ஆலை அமைப்பதற்கென கிளி - மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களின் பணிப்பின் பெயரில் கிளி செல்வாநகரில் மூன்று ஏக்கர் காணி வழங்கப்பட்டு ஆலை அமைக்கும் ஆரம்ப வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

12.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மேற்படி நெல் குற்றும் ஆலைக்கான நிதியினை அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் பெறுவதற்கான நடவடிக்கையினைக் கிளி மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மூலம், வடகிழக்குக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையரினால் மெற்கொள்ளப்பட்டு வருவதாகவும், நிதி கிடைத்ததும் வெகு விரைவில் ஆலை வேலைகள் ஆரம்பிக்கப் பெற்று கிளி மாவட்ட விவசாயிகளின் குறைகளை நிவர்த்தி செய்ய முடியுமெனச் சங்கப் பொது முகாமையாளர் இரத்தினசிங்கம் தெரிவித்தார். (சோ)

# அர்ப்பணிப்புடன் செயற்படும் புலிகள் மீது அழுத்தங்கொடுப்பதை ஏற்கமுடியாது

## பா. உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் விடுதலைப்புலிகள் அர்ப்பணிப்புடன் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளநிலையில் அவர்களை உதாசீனப் படுத்தும் வகையில் கருத்துக்கள் தெரிவிக்கக் கூடாது என்றுதமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்ற நோக்கில் ஆயுதப் போராட்டங்களை இடைநிறுத்தி விடுதலைப் புலிகள் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் வடக்குக் கிழக்குப் பிரச்சினையை தீர்ப்பதற்காக விடுதலைப்புலிகள் முழு அளவில் முயற்சி செய்து வரும் நிலையில் அவர்கள் மீது அழுத்தங்களைக் கொடுக்க முற்படும் நடவடிக்கைகளை வரவேற்க முடியாது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சிரேஸ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டிக்காட்டினார்.

விடுதலைப்புலிகள் தீவிரவாத நடவடிக்கைகளையும் அரசியல் படுகொலைகளையும் நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிப் பேச்சாளர் தெரிவித்திருந்தமை தொடர்பாக கருத்துக்கூறும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் இத்தகைய வீண் அழுத்தங்கள் சமாதான நடவடிக்கைகளை உதாசீனப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். ஆகவே இவ்வாறான வீண் அழுத்தங்களைக் குறைத்து பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஆக்கபூர்வமான ஆதரவே தற்பொழுது தேவைப்படுவதாகவும் ஜோசப்பரராஜ சிங்கம் கூறியுள்ளார்.

# திறன் விருந்தி பயிற்சிப்பட்டறை

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இன்று தொடக்கம் 12-08-2003 செவ்வாய்க்கிழமைவரை நான்கு நாட்களிற்கு பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சகல கிராமசேவகர்களிற்கும் இக்கருத்தரங்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சகல கிராம அலுவலர்களும் பங்கு பற்றவேண்டும் என அரச அதிபர் தி. இராசநாயகம் அறிவித்துள்ளார். இக்கருத்தரங்கில் பங்குபற்றுவோருக்கு உணவு, சிற்றுண்டி, பிரயாணப்படி என்பன வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு

துணுக்காய் பிரதேசத்தில் தேறாங்கண்டல் கிராமத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு 06.08.2003 பி.ப.7.30 மணிக்கு தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் கிராம சேவையாளர் பி.அசோகன் தலைமையில் இடம்பெற்றது.


இக்கூட்டத்தில் ஊரகதேசிய எழுச்சிப்பேரவை தொடர்பான கருத்துரைகளை போராளி நா.இசைப்பரியன் ஊரகவளர்ச்சித்திழட்ட பொறுப்பாளர் கி.கனியன், அரசியல் துறையைச் சேர்ந்த பெ.தனம் வழங்கினார்கள். தொடர்ந்து ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு இடம்பெற்றது.செயலாளராக தங்கவேல்-கணேஸ் துணைச்செயலாளராக கு.தியாகராசா, பொருளாளராக இ.செல்வநாயகம் உறுப்பினர்களாக நா.லோகேஸ்வரன், திருமதி. செ.நீற்றா மனோன்மணி திருமதி. ஜெ.மேரி, அ.கெனடி, மா.தங்கவேல், நா.கேசவன்.ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## வவு-நலன்புரி நிலையங்களிலிருந்து

# மேலும் பன்னிரண்டு குடும்பங்கள் சொந்த இடத்திற்குத் திரும்பினர்

(அலுவலக செய்தியாளர்)

சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து புலம் பெயர்ந்து வவுனியா பாவற்குளம், நெலுக்குளம், பூந்தோட்டம் பராமரிப்பு நிலையங்களில் தங்கியிருந்த குடும்பங்களில் ஒரு தொகுதி நேற்று மீண்டும் கிளிநொச்சி வந்தடைந்தனர்.



யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரால் மேற்படி பராமரிப்பு நிலையங்களிலிருந்து 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 அங்கத்தவர்கள் நேற்று அழைத்து வரப்பட்டு நண்பகல் 12.30 மணிக்கு கிளி.கரைச்சி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கரைச்சி பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினால் மேற்படி வருகைதந்த மக்களுக்கு உடன் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டதுடன் யு.என்.எச்.சி. ஆர்.நிறுவனத்தினரால் 12 குடும்பத்தினருக்கும் கூரை விரிப்புக்களும் வழங்கப்பட்டன.

அதனையடுத்து கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தனின் ஏற்பாட்டின் பேரில் மேற்படி குடும்பத்தினர் வாகனங்களில் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (சோ)

# வட்டக்கச்சி—புளியம்பொக்கணை வீதி திருத்தப்படுமா?

வட்டக்கச்சிப் பகுதியிலிருந்து பெரியகுளம் ஊடாகப் புளியம்பொக்கணைச் சந்தியைச் சென்றடையும் வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது.இவ் வீதியூடாகப் புதுக்குடியிருப்பு ஸ்கந்தபுரம், மல்லாவிப் பேருந்துகள் சேவையை மேற்கொண்டு வருகின்றன. இந்தப் பேருந்துகள் குறிப்பிட்ட நேரத்திற்குச் சேவையைச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. தருமபுரம் வைத்தியசாலைக்கு நோயாளரைக் கொண்டு செல்லும் போது இவ் வீதி சீர்கேட்டினால் நோயாளர் வேதனைகளை அனுபவிக்க வேண்டியுள்ளது. இவ்வீதியில் குறிப்பிட்ட சில பகுதிகளில் பற்றைகள் வீதி ஓரமாகப் பரந்து காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)


# பயனியர் பேருந்துப் பணி



புதுக்குடியிருப்பு, கற்சிலைமடு, கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம், புளியங்குளம் வழித்தடத்தில் 12-08-2003 ஆம் நாளில் இருந்து மேற்படி பணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## நேர ஒழுங்கு:

### புதுக்குடியிருப்பு - புளியங்குளம்

| புதுக்குடியிருப்பு | கற்சிலைமடு | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|
| காலை 11.30 | 12.15 | 02.15 | 3.00 |

### புளியங்குளம் - புதுக்குடியிருப்பு

| புளியங்குளம் | மாங்குளம் | கற்சிலைமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| காலை 09.00 | 09.45 | 11.45 | 12.30 |

(சி-8454)

முகாமையாளர்,
பயனியர் போக்குவரவு ஊர்தி, வழியனுமதிப் பணியகம்.

# ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் மறுக்கப்பட்ட வெளிநாட்டினரை நாடுகடத்த புதிய திட்டம்!

**ஐரோப்பிய நாடுகளில் புகலிட விண்ணப்பம் மறுக்கப்பட்ட வெளிநாட்டவர்களை நாடுகடத்த புதிய திட்டம் வகுக்கப்பட இருக்கின்றது.**

ஐரோப்பாவிலிருந்து முற்றாக வெளியேற்றப்படும் வரை அவர்கள் பேருந்து மற்றும் புகையிரதம் மூலம் வேறு நாடுகளுக்கு ஏற்றிச் செல்லப் படுவார்கள்.

தற்போது விண்ணப்பக் கோரிக் கைகள் நிராகரிக்கப்பட்ட வெளி நாட்டவர்கள் விமானங்கள், கப்பல் கள் மூலமாக நாடு கடத்தப்படுகின் றார்கள்.

இந்த விடயம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பொது இணக்கத்தை எட்டாத நிலையில் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒரு நாட்டிலிருந்து நாடு கடத்தப்படும் புகலிடம் கோருவோரை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டிவருகின் றன.

இந்த நபர்கள் தமது நாட்டில் தங்கியிருக்க முனையலாமென அவை அச்சம் கொண்டுள்ளன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் புதிய திட்டம் வகுக்கப்பட் டுள்ளது.

இந்தத் திட்டம் அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளது.

ஆனால் புகலிடக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட பிரஜை ஒருவர் எந்தவொரு நாட்டிலாவது சித்திர வதை மற்றும் கொலை அச்சுறுத் தல்களை எதிர்கொள்வார் என்றால் அவர் அந்த நாட்டிற்கு அனுப்பப் படக் கூடாது என்றும் குறிப்பிடப்பட் டுள்ளது.

## மேன்முறையீடு

சுவிற்சர்லாந்து நீதிமன்றத்தின் தீர்ப் பிற்கு எதிராக பாகிஸ்தானின் முன் னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவும் அவரது கணவரும் மேன்முறையீடு செய்யவுள்ளனர்.

சுவிஸ் வங்கிகளிலிருக்கும் 12 மில்லியன் அமெரிக்க டொலர்களை யும் 188 ஆயிரம் டொலர் பெறுமதி யான வைர நெக்லசையும் பாகிஸ் தான் அரசிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை யடுத்தே, இந்த மேன்முறையீட்டை பெனாஸிர் பூட்டோ செய்யவுள்ளார்.

# ஒய்வூதிய சீர்திருத்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

பிறேசில் ஓய்வூதிய சீர்திருத்தத்திற்கு எதிராக 40,000 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஓய்வூதியச் சீர்திருத்தத்திற்கு எதிராகத் திரண்டெழுந்த அரச ஊழியர்கள் பிறேசில் காங்கிரசின் கட்டடத்தை கல்லால் தாக்கிச் சேதத்தை ஏற்படுத்தி யுள்ளனர்.

இவர்களைப் பொலிசார் கட்டுப்படுத்த முயன்றபோது 04 பொலிசாரும், 02 ஆர்ப்பாட்டக்காரர்களும் காயம் அடைந்துள்ளனர்.



பிறேசிலில் பொது சேவையாளர் ஒருவர் தலை நகரிலுள்ள தேசிய காங்கிரஸ் கட்டடத்தின் யன் னலை உடைக்கிறார்

# லைபீரியாவுக்கு அவசர நிதியுதவி கிடைக்கும்; உதவி வழங்கும் நாடுகள் கூடித்தீர்மானம்

லைபீரியாவுக்கு அவசர நிதி யுதவியாக ஆறு கோடியே 90 இலட்சம் டொலர்கள் தேவைப்படும் என்று வழங்கும் நாடுகள் குழுக் கூட்டம் தீர்மானித்துள்ளது.

அதிகமான நாடுகள் பங்கு பற் றிய ஐ.நா. சபை ஆதரவில் நடை பெற்ற இக்கூட்டத்தில், ஐ.நா. செய லாளர் கொபி அனான், அத்தியாவ சிய உணவுப் பொருட்களை வழங்க 2 கோடி 20 இலட்சம் டொலர்களும், இருப்பிட வசதிக்கு 90 இலட்சம் டொலர்களும் சுகாதார வசதிகளை வழங்க 85 லட்சம் டொலர்களும் தேவைப்படும் என்று கூறியுள்ளார்.

32 இலட்சம் பேர் வாழும் லைபீரி யாவில் 14 வருட காலமாக சிவில் யுத்தம் நடைபெற்று வருகின்றது.

தலைநகரான மொன்ரோவியா வில் மட்டும் 04 இலட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளார்கள்.

இதற்கிடையில் அங்கு அமை தியை நிலைநாட்டுவதென மேற்கா பிரிக்க நாடுகளின் சமாதானப் படை யினர் கடந்த திங்கட்கிழமை தொடக கம் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றார்கள்.

தலைநகரான மொன்ரோவியாவை அவர்கள் கடந்த புதனன்று பொறுப் பேற்றுக் கொண்டார்கள் என்றும், முக்கியமான பாலம் ஒன்றைக் கடந்த செவ்வாய்க்கிழமையே அவர்கள் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர் என்றும் அறிவிக்கப் படுகின்றது.

தற்சமயம் 450 மேற்காபிரிக்க நாடுகளின் அமைதிப்படையினர் அங்கு செயலாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு 07 அமெரிக்க கடற்படை வீரர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகின் றார்கள்.



மேற்காபிரிக்க சமாதானப் படையினரை மொன்ரோவியா வில் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் லைபீரியர்கள்.

# வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு அரச ஊழியருக்கு உரிமையில்லை

## - உச்சநீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

வேலை நிறுத்தத்தில் ஈடுபடு வதற்கு அரச ஊழியர்களுக்கோ தொழிற்சங்கங்களிற்கோ அடிப் படையோ சட்ட உரிமையோ, தார் மீக உரிமையோ இல்லையென உச்ச நீதிமன்றம் கடந்த புதனன்று தீர்ப்பளித்துள்ளது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பணி நீக்கம் செய்யப்பட்ட தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரி யர்கள் தாக்கல் செய்த மனுக்கள் மீதான தமது தீர்ப்பை உச்ச நீதி மன்ற நீதிபதிகள் எம்.பி. ஷா, ஏ.ஆர். லட்சுமணன் ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழு தெரிவித்துள்ளது.

கூட்டுபேர உரிமை பெற்றுள்ள தொழிற்சங்கங்களுக்கும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உரிமை இல்லையென நீதிபதிகள் கூறியுள்ள னர்.

அரச ஊழியர்கள் தங்களது குறைகளுக்குத் தீர்வுகாண வேறுபல வழிகள் இருப்பதாகவும் அவர்கள் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் எஸ்மா சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என்றும் கூறியுள்ளனர்.

## - ஆயுதங்கள் வழங்கலில் மோசடி -

# பெர்னாண்டஸை பதவி விலக்க கோரிக்கை இரு அவைகளிலும் தொடர்ந்து சர்ச்சை

(புதுடில்லி)

கார்கில் போரின்போது வாங்கப் பட்ட ஆயுதங்களின் விபரம் வழங் கப்படாமையினால் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸை குற்றவாளியென பொதுக் கணக்கு குழு குற்றம் சாட்டியுள்ளதையடுத்து இதற்கு பிரதமர் வாஜ்பாய் விளக்க மளிக்க வேண்டுமென காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மக் களவையில் நேற்று முன்தினம் கேட் டுள்ளன.

இதனை பாரதிய ஜனதா கட்சி யினர் எதிர்த்தமையினால் அவை யில் பெரும் குழப்பம் ஏற்பட்டதை யடுத்து அவைத் தலைவர் மனோ கர் ஜோஷி அவையை நாள் முழுவதும் ஒத்தி வைத்துள்ளார்.

மக்களவை போலவே மாநிலங் களவையிலும் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப் பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



போத்துக்கலின் மத்திய பகுதியில் காட்டுத்தீயிலிருந்து கட் டடங்களைக்காக்கப் போராடும் தீயணைப்புப் படையினர்.

## இந்தியா மறுப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் பயங்கரவாத முகாம்கள் உள்ளதாக பாகிஸ்தான் கூறியுள்ள குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது.


இரு தரப்பு உறவுகளை மேம் படுத்திட இத்தகைய எதிர் வாதத்தை பாகிஸ்தான் விட் டொழிக்க வேண்டுமென்று புதுடில்லி யில் வெளியுறவு செய்தித் தொடர் பாளர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மை யினரின் பாதுகாப்பை பார்க்கையில் இந்தியாவின் சிறுபான்மையினரின் பாதுகாப்புப் பற்றிப் பேச பாகிஸ் தானுக்கு அருகதையில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.



மத்திய பொஸ்னியாவில் செனிகா என்ற பகுதியில் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆயுதங்களை அழிக்கத் தயாராகும் ஜேர்மனிய சமாதானப் படையினர்

# அமைதியாகத் துயிலெழுப்பும் நவீன கடிகாரம்



தற்போது மனிதர்களின் பாவனையிலுள்ள கடிகாரங்கள் அனைத்தும் அதிக சத்தத்துடன் கரகரப்பாக ஒலித்து திடுக்கிடச் செய்கின்றன என்பதனால் அது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல என்று அமைதியாக மனிதனை நித்திரையிலிருந்து எழுப்புவதற்காக ஜப்பான் புதிய கடிகாரம் ஒன்றைக் கண்டுபிடித்து, சந்தையில் விற்பனைக்கு விட்டுள்ளது.

இது 7 1/2 அங்குலம் உயரம், 5 1/4 அங்குலம் அகலம், 6 1/4 அங்குலம் விட்டம் கொண்டது.

இந்தக் கடிகாரம் கொஞ்சம் கொஞ்சமாக விளக்கு வெளிச் சத்தையும்,வாசனையையும், இயற்கையான ஒலிகளையும், அதிகரிக்கச் செய்து மனிதர்களை மிக துள்ளலுடன் விழிக்கச் செய்கின்றது.

காலை 6 1/2 மணிக்கு எழுந்திருக்க வேண்டு மென்று, இந்தக் கடிகாரத்தில் ஏற்பாடு செய்து விட்டால், காலை 6 மணிக்கு அதாவது அரை மணி நேரத்துக்கு முன்பாகவே கொஞ்சம் கொஞ்சமாக ஒளியைப் பிரகாசமாக பாய்ச்சும் வெளிச்சம் அதிகரிக்க அதிகரிக்க விளக்கு ஒளி நறுமணத்தைக் காற்றில் கலக்கவிடும். இதன் போது மோப்ப சக்தி நரம்புகளைத் தூண்டிவிடுவதால் மிகவும் இலகுவாக விழிப்பு ஏற்பட்டு விடும்.

இதன் பின்ன் 1/4 மணிநேரம் கழித்து, அதாவது 6 1/4 மணிக்கு 5 வகை யான இயற்கை ஒலியை மெல்லிசை போல ஒலிக்க வைக்கும் கடலலைகளின் ஓசை, பறவைகளின் பாடல் முதலியன இதில் உண்டு. 6 1/2 மணிக்கு சரியாக மணி போன்ற ஒலி எழும்பும். இதன்போது கண்டிப்பாக எழும்ப முடியும் என இதைக் கண்டுபிடித்தவர்கள் கூறுகின்றார்கள்.

இந்தக் கடிகாரத்தை வாங்கும் போது பல வகையான நறுமண பாக்கெட், முதல் தேவை யான அனைத்தையும் இக் கடிகாரத்துடன் பெற்றுக்கொள்ள முடியும். இதன் விலை 50 அமெரிக்க டொலர்கள் ஆகும்.




முதல் கை ரிக்ஷாவை கண்டுபிடித்தவர் ஒரு அமெரிக்க கிறிஸ்தவ பாதிரியார். ஜப்பான் யோகோஹாமா நகரில் வசித்து வந்த இருவர் தனது உடல் நலமற்ற மனைவியைத் தெருவில் கூட்டிச் செல்வதற்கு இக்கை ரிக்ஷாவை 1869 இல் வடிவமைத்தார். இப்பாதிரியாரின் பெயர் ஜொனத்தன் ஸ்கூபி இதன் பின்னரே தெற்காசியாவில்இது பிரபல்யம் ஆகத் தொடங்கியது எனலாம்.

# பல்லில்லா மெல்லுடலிகள்

நத்தை போன்ற மெல்லுடலிகளுக்குப் பல் இல்லை. ஆனால், இலைகளையும், பூச்சிகளையும் அரைத்து விழுங்குவதற்காக அவற்றின் வாயில் அரம் போன்ற ஒரு அமைப்பு இருக்கின்றது.

இது வரிசை வரிசையாகக் கூர்முனைகள் கொண்ட நாக்குப் போன்றதொரு அமைப்பு, 'அராவு நாக்கு' என்று இதற்குப் பெயராகும்.

முன்னும் பின்னுமாக இழுத்து நத்தை உணவை அரைத்து உண் கின்றது. தேயத் தேயப் புதிய இந்த 'அரவு நாக்கு' வளர்ந்துவிடும் என்றும் கூறப்படுகின்றது.

# வெள்ளியின் விந்தை

வெள்ளிக் கோளில் ஒரு நாள் என்பது எத்தனை மணிநேரம் என்பதை வானியாலர்கள், நட்சத்திரங்களை வைத்துக் கணக்கிட்டுப் பார்த்து வெள்ளி தன் அச்சில் ஒரு முறை சூழல்வதற்கு 243 நாள் எடுக்கின்றது எனக் கூறுகின்றார்கள்.

அதாவது வெள்ளியிலிருந்து வானத்தைப் பார்த்தால் 243 நாளுக்கு ஒரு முறை நட்சத்திரங்களை அதே இடத்தில் பார்க்கலாம் என்று கூறப்படுகின்றது.

வெள்ளியிலிருந்து சூரியன் போவதைக் கவனித்தால் வெள்ளியில் ஒரு நாள் என்பது 117 நாட்களுக்குச் சமம். அதாவது வெள்ளியில் சூரியன் உதித்து அதன் பின் மறைவதற்குப் பூமிக்கணக்கில் 117 நாள் எடுக்கும்.

அத்துடன் வெள்ளி கிழக்கிலிருந்து மேற்காக எதிர்த்திசையில் சுற்றுவதால் அங்கே சூரியன் மேற்கில் உதித் துக் கிழக்குத் திசையில் மறையும் என்றும் கூறப்படுகிறது.

# வானியலாளர் இனங்காணா "இருண்ட பொருட்கள்"

விண்வெளியில் காணப்படும் பொருளில் 90 சதவீதத்தை இன்னும் வானியலாளர்கள் இனம்கண்டு கொள்ளவில்லை. அவற்றை வானியலாளர்கள் இருண்ட பொருள் (**dark matter**) என்று அழைக்கிறார்கள்.

எரிகல், கோள், துணைக்கோள், போன்ற விண்வெளிக் கோளங்களின் தன்மைகள், இயக்கங்கள், விசைகள் போன்றவற்றையெல்லாம் வானியலாளரும் விண்வெளி வல்லுநர்களும் பெரும்பாலும் கண்டறிந்து விட்டார்கள்.

அப்படியிருந்தும் இந்தக் கோளங்கள் சில வேளைகளில் தாறுமாறாக நடந்துகொள்கின்றன. அந்த வகைகளிலொன்று சில சமயம் பாதையிலிருந்து வெளியே வந்துவிடுவது. இதற்கு ஓர் உதாரணமாகும்.

இப்படியான நிகழ்வுகளுக்கு வான்வெளியிலுள்ள இருண்ட பொருளே காரணம் என்று கருதுகின்றார்கள்.

உடு மண்டலங்கள் இருக்கும் பகுதியில்தான் இருண்ட பொருள் பெரும்பாலும் காணப்படுவதாக அறிவியலாளர்கள் கருதுகின்றார்கள்.

இருண்ட பொருளை அண்டவெளிவெற்றிடம் (**cosmic Voids**) என்றும் அழைக்கப்படுகின்றது.

இருண்டபொருள் மற்ற விண்வெளிப் பொருள்களின் ஈர்ப்பு விசையைப் பாதித்து அவற்றைத் தன் பக்கமாக ஈர்க்கலாம் அல்லது எதிர்த்திசையில் தள்ளிவிடலாம். இது தவிர அதனால் வேறு பாதிப்பு இல்லை. பிரபஞ்சத்தை ஈர்த்து ஒன்றாக நிறுத்துவதே இருண்ட பொருள்தான் என்பது அறிவியலாளர்கள் கருத்தாகும்.

# தாய்லாந்து நாட்டவருக்குப் பிடித்தவை நமக்கும் பிடிக்குமா?

தாய்லாந்து நாட்டில் வெட்டுக்கிளி, கூட்டுப்புழு, கரப்பான், பூச்சி சிலந்தி, வண்டினங்கள் என எதையுமே விடாமல் சிறந்த புரோட்டீன் உணவு என அந்நாட்டு மக்கள் சாப்பிட்டு வருகின்றார்கள்.

அதுமட்டுமன்றி கோழியின் அடைகாக்கப்பட்ட முட்டைகளையும் மிகவும் விரும்பி உண்பார்கள். அங்குள்ள கடைகளில் அடைகாக்கப்பட்ட முட்டைகள் இலக்கமிடப்பட்டு விற்கப்படும். 12-15 நாட்கள் வரையான முட்டைகளில் 18 ஆம் நாள் முட்டைதான் அதிக புரோட்டீன் சத்துள்ளது என்று அதிக விலையாகவும் இருக்கின்றது.

மாமிச உணவுகளைவிட வெட்டுக்கிளி போன்றவற்றில் புரதம் அதிகம் என்றும், கொழுப்பு குறைவு என்றும் அமினோ அமிலங்கள் அதிகம் என்று தாய்லாந்து உணவு நிபுணர்கள் கூறியுள்ளார்கள்.

தாய்லாந்தின் வடகிழக்கு பிராந்தியத்தின் வறுமையில் வாழ்பவர்கள்தான் பூச்சி, புழுக்களை உண்ணும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். தாய்லாந்தின் பொருளாதார உச்சத்திற்குச் சென்ற காலப்பகுதியில் கிராமவாசிகள் தொழில் வாய்ப்புக்களுக்காக நகரங்களை நோக்கி படையெடுத்தபோது தமது இந்த உணவுப் பழக்கத்தையும் நகரவாசிகளிடம் அறிமுகப்படுத்திவிடவே, இன்று அந்நாட்டில் பூச்சி வண்டினங்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.



இரசாயன உரங்கள், பூச்சி கொல் லிகளினால் பெரும் தொகையான பூச்சி, புழுக்கள் மறைந்துவிட, ஏனையவற்றை தாய்லாந்து மக்கள் சாப்பிட்டுவருகின்றார்கள்.




ஒட்டமாவடி- தியாவட்டவானில் வசிக்கும் ஒருவரின் வீட்டில் கோழி மாங்காய் வடிவத்தில் இட்ட முட்டை இதுவாகும்.

# சோம்பேறித் தனம் உங்களுக்குமா....?

மனிதர்களின் பல்வேறு குணங்களுக்கும், உணர்வுகளுக்கும் ஹோர்மோன்களே காரணமாகும்.விருப்பு வெறுப்புகளுக்கும் சிலர் சுறுசுறுப்பாகவும் சிலர் சோம்பேறிகளாகவும் இருப்பதற்கு "தைரோயிட்" எனும் சுரப்பிதான் காரணமாகும்.

வயதாகும்போது இந்த தைரோயிட் சுரப்பி சரியாக வேலை செய்யாது. இதனால்தான் வயதானவர்கள் குளிர்கின்றது என்றுகூறி அடிக்கடி போர்த்திக் கொள்கின்றார்கள். ஏனெனில், போதுமான வெப்பத்தை உடல் உற்பத்தி செய்வதில்லை.தைரோயிட் ' அதிகமாக வேலை செய்யுமானால் பொறுமையின்மை, அகோரபசி, உயர் இரத்த அழுத்தம், வியர்வை வெப்பம் தாங்க முடியாத தன்மை போன்ற பிரச்சினை உருவாகும்.


தைரோயிட் ஹோர்மோன்கள் அதிகம் சுரக்கும்போது சிறுநீரகத்தில் கற்கள் தோன்றுகின்றன.பயவுணர்வு, எரிச்சல் குணம், படபடப்பு, அதிக உணர்ச்சிவசப்படுதல், தூக்கமின்மை போன்ற குணக் குறிகள் அதிக தைரோயிட் சுரப்பால் ஏற்படுபவை என்கின்றார்கள் மருத்துவர்கள்.

# இரவில் நேரம் காட்டும் விளக்கு

இரவில் பயணம் செய்யும் போது திடீரென நேரத்தை அறிய நேர்ந்தால் நாம் சங்கடத்திற்கு உள்ளாக முடியாதவாறு ஜப்பான் புதிதாக விளக்கு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த விளக்கை அழுத்தினால் தற்போதைய நேரம் என்னவென்று அருகிலுள்ள இடத்தில் ஒளிபரப்பிக் காட்டும் தன்மையுடையது. தீப்பெட்டியளவில் உள்ள இந்த கையடக்க விளக்கில் அலாரமும் உண்டு.

இதனை இலகுவில் எடுத்துச் செல்லமுடியும் என இதை தயாரித்த நிறுவனம் கூறியுள்ளது.



# மாதிரி முன்பள்ளி விளையாட்டு விழா



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு மாதிரி முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த 27ஆம் திகதியன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி முன்பள்ளி விளையாட்டு விழாவில் முதன்மைவிருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகமும், சிறப்பு விருந்தினராக த.பு.க. நிர்வாக அலுவலர் லோரன்ஸ் கிறிஸரி ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் வெற்றி பெற்ற முன்பள்ளிச் சிறார்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். (சோ)

# பதிவாளர் இன்மையால் மக்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பிறப்பு, இறப்புப் பதிவாளர் இல்லாததால் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலை யில் நடைபெறும் பிறப்பு, இறப்புக்களை சம்பந்தப்பட்டவர்கள் யாழ். கச்சேரிக்குச் சென்று பதிவு மேற்கொள்ள வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தரிடம் கேட்டபோது; வைத்தியசாலைக்கு பிறப்பு, இறப்புப் பதிவாளரை நியமிக்க வேண்டியது கச்சேரியே என்றும் யாழ். செயலகத்திற்கு இது பற்றிய பல முறை தெரியப்படுத்தியும் இதை அவர்கள் கவனத்திற் கொள்ளாததால் நெருக்கடி தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றார். (33)

# கைவிடப்பட்ட நாய்களால் தொல்லைகள் அதிகரிப்பு

(பூநகரி)

பூநகரியில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இருந்த மக்கள் மீளக்குடியமர்வுக்குச் சென்றதால் முகாம்களாக இருந்த ஜெயபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, அரசபுரம், கிராஞ்சி ஆகிய இடங்களில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இந்நாய்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலைமையினால் கடந்த சில நாட்களின் முன்னர் அரசபுரத்தில் இறந்த நாயைப் பல நாய்கள் உண்ணும் நிலை ஏற்பட்டது. அத்துடன் அக்கிராமத்தில் பொதுமகன் ஒருவரின் இரு செம்மறியாடுகளை உண்ணும் நிலையும் ஏற்பட்டது. இந்நிலைமை தொடராமல் இருக்க உரியவர்கள் ஆவன செய்யுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (34)

# தமிழீழத்திலே உருவாகின்ற கவிதைகள் உள்ளத்தைத் தாக்கும் வீச்சாகவுள்ளது!

## தமிழ் விழாவில் பேராசிரியர் சிவலிங்கராஜா



இன்று தமிழீழத்திலேயே கவிதை மிகவும் உச்ச நிலையை அடைந்திருக்கின்றது. இக்கவிதைகள் உள்ளத்தைச் சென்று தாக்குகின்ற வீச்சைக் கொண்டுள்ளன என பேராசிரியர் சிவலிங்கராஜா அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ் விழா - 2003இல் கலந்து சிறப்புரை ஆற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழிலே பொருள் வாழ்விற்கு இலக்கணம் தந்தவன் தொல்காப்பியன். எழுத்துக்கும் சொல்லுக்கும் பல்வேறு மொழிகளிலே இலக்கணம் உண்டு. ஆனால், பொருளுக்கு இலக்கணம் தந்தவன் தொல்காப்பியன். தொல்காப்பியம் 2800 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்களின் வாழ்வியல் பற்றி, வாழ்வு பற்றி இலக்கணம் கூறியது. இத்தொல்காப்பியத்திலே ஒன்று இரண்டு சொற்களைத் தவிர வேறு எந்த வடமொழிகளையும் காணமுடியாது.

எங்களுடைய தமிழ் வாழ்வு பற்றி, தமிழ் வளம் பற்றி, தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி பாடாத புலவர்களே இல்லை. எங்களது பாரம்பரியத்தில் 2800 ஆண்டுகளின் முன்னரே தமிழக் கவிதை உயிரோடும். உயிர்ப்போடும் வனப்போடும், வாழ்வோடும் இருந்தது. எங்களது எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களை நீங்கள் பார்த்தால் அவற்றில் உள்ள கவித்துவத்தின் மகத்துவத்தை, அதில் உள்ள கவித்துவத்தின், சிறப்பைக் கண்டு கொள்ளுவீர்கள்.

அக்கால மக்களின் வாழ்வியலை மிகவும் இறுக்கமாக சொற் கட்டோடு தமது வாழ்வியலை பதிவு செய்த பெருமைக்குரியவர்கள் தமிழ் மக்கள்.

நாங்கள் அகம் என்றும் புறம் என்றும் காதல் என்றும் வீரம் அல்லது வீடு என்றும் வெளி என்றும் எவ்வாறு கூறினாலும் எமது வாழ்வின் வனப்புகளை அவர்கள் மிகவும் அற்புதமாகவே சொன்னார்கள்.

புறநானூற்றிலே இன்றைய காலத்துக்கு ஏற்றதாக பல பாடல்கள் வருகின்றன. இதேபோல தமிழ் மக்களின் இன்பியல் வாழ்வு, தமிழ் மக்களின் அகவாழ்வு தமிழ் மக்களின் வீட்டு வாழ்வுக்கு பாடம் தரும் பாடல்கள் மிக ஏராளம். அவை எங்களது வாழ்வின் அர்த்தங்களை, வாழ்வின் அடையாளங்களை நிலை நிறுத்துகின்ற வகையிலே அமைந்தன. சங்ககாலத்தில் அமைந்த பாடல்களில் வடசொற்களைக் கண்டு பிடிக்கமுடியாது.

இதற்கு அடுத்து வந்த காலத்தில் தமிழ் நாடு அது இரண்டு பாதைகளில் சென்றது. ஒன்று அறம் பற்றி நீதிபற்றி, வாழ்வியல் பற்றி ஒழுக்கம் பற்றி பேசியது. இங்கே தான் இந்த வட மொழியின் செல்வாக்கு தனது முதல் அடியை செலுத்துகின்றது.

ஆனால், எங்களது வாழ்வின் அற்புதமான அர்த்தத்தை புலப்படுத்துகின்ற சிலப்பதிகாரம், அந்தக் கால கட்டத்திலே தோன்றிய திருக்குறள் இந்த இரண்டு நூல்களுமே தமிழ் மக்களின் அடையாளத்தைப் புலப்படுத்தப் போதுமானதாகும்.

சிலப்பதிகாரம் எங்களது தமிழ் மொழியின் கவித்துவத்தை, தமிழ் மொழியின் பிறப்பைக் காட்டுகின்ற ஒரு கால கட்டத்துக்குரிய ஓர் அடையாளம் ஆகும்.

இக்காலத்திலே நாங்கள் எங்களது கவிதையை வளர்த்தெடுக்க வேண்டிய காலத்தில் நிற்கிறோம். இன்று தமிழீழத்தின் கவிதை மிகவும் உச்ச நிலையிலே நிற்கின்றது. தமிழகத்தோடு ஒப்பிடுகின்றபோதும் மலேசியா, சிங்கப்பூரோடு ஒப்பிடுகின்றபோதும், புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களது கவிதைகளிலே சில வீச்சைக் காண்கின்றோம் ஆனால், ஈழத்துதமிழ் கவிதைகளிலே ஒரு வீச்சையும், மூச்சையும் காண்கின்றோம்.

உண்மையிலே தமிழகத்தில் இருந்து வருகின்ற கவிதைகள் ஒரு ஒழுங்கு முறைக்கமைவாக வருவதில்லை. தமிழ் சரியான முறையில் கையாளப்படுவதில்லை. ஆனால், ஈழத்தில் இருந்து வருகின்ற கவிதைகள் வீச்சாகவும், உள்ளத்தைச் சென்று தாக்குகின்ற வகையிலும் அமைந்திருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் இருந்து வருகின்ற கவிதைகள் காதல் மற்றும் அதனுடன் இணைந்த சில விடயங்களையுமே பாடுகிறது. அதில் இன்னும் மோசமானது தென் இந்தியச் சினிமா. இதில் வருகின்ற பாடல்கள் கவிதையும் அல்ல; பாடலும் அல்ல. அதில் பல மொழிகளும் கலந்து நிற்கின்றன.

அந்த வகையில் இன்று அற்புதமான புதுக் கவிதைகளையும், கவிதைகளையும் ஈழம் இன்று படைத்து நிற்கின்றது. அவ்வாறு எழுவதற்கு முக்கியமான காரணம் நாங்கள் வாழ்வியலில் அனுபவித்து வருகின்ற துன்பமே ஆகும். தமிழகத்தின் கவிதை, செய்யுள், பாடல் ஆகியன இன்று எங்களிடையே எடுப்பாக ஆகிவிட்டன.

ஆனால், எங்களுடைய உள்ளத்தின் ஊற்றில் இருந்து, உள்ளத்தின் நாதத்தில் இருந்து எங்களுடைய கவிதைகள் பாய்கின்றன. அவை போராளிகளுக்கூடாகவும் போரைப் பார்த்து வாழுகின்றவர்களுக்கூடாகவும் இத்தகைய துன்ப துயரங்களை சகிப்பவர்களுக்கூடாகவும் இக்கவிதை சிறப்பாகப் பாய்கின்றது.

எங்களது தமிழ்க் கவிதைகள் மந்திர சொல்லின்பம் போன்றவை. அதற்குள் பொருள் பொதிந்துள்ளது. அக்கவிதைகளை பண்டைக்காலம் முதல் இந்தக் காலம் வரை படித்து இன்னும் பல கவிதைகளை உருவாக்க வேண்டும் எனவும் பேராசிரியர் மேலும் தெரிவித்தார். (லோ)

# கிளி. கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் கட்டடங்கள் அமைப்போர் கவனத்திற்கு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் புதிதாக கட்டடங்கள் மற்றும் சுற்று மதில்கள் அமைப்பவர்கள் நகர அதிகார சபையின் அனுமதி பெற்று அதன்பின் பிரதேச சபையின் அனுமதி பெறப்பட்ட பின்பே நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென அறியக்கிடைத்துள்ளது.

இது குறித்து கிளிநொச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தனுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில்; தற்போது நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பிரதான நகர வீதிகள் அகலமாக்கப்பட்டும் புனரமைக்கப்பட்டும் வருகின்றன.


இதன்பிரகாரம் ஏ-9 நெடுஞ்சாலையில் வீதியின் மத்தியிலிருந்து இரு மருங்கும் 66 அடிக்கு அப்பாலும் ஏ-5 பரந்தன் வீதியில் வீதி மத்தியிலிருந்து இரு மருங்கும் 50 அடிக்கு அப்பாலும் மற்றும் உள்ளூர் வீதிகள் 45 அடியும் சாதாரண வீதிகள் 33 அடியும் ஒழுங்கைகள்23,20அடிகளுக்கும் அப்பால் புதிய கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படலாமெனவும்,

எனவே, மேற்படி பணிகளை ஆரம்பிக்க உள்ளவர்கள் பணிகளை ஆரம்பிப்பதற்கு முதல் நகர அதிகார சபை, பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்ற பின்பே பணிகளை ஆரம்பிக்கும் வண்ணம் தெரிவித்துள்ளார். (சோ)

# மிதிவெடிகள் அகற்றல்

வடமராட்சி கிழக்கில் உள்ள வத்திராயன் வடக்கு தொடக்கம் வத்திராயன் தெற்கு வரையான அரசடி வீதியில் அமைந்துள்ள இராணுவ அணையின் முன் உள்ள மிதி வெடிகள் மற்றும் கண்ணிவெடிகள், வெடிபொருட்களை மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் அகற்றி வருகின்றனர்.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியேறுவது அதிகரித்து வருவதனால வேகமாக மிதிவெடிகள் அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (11)



2003 வடக்கு – கிழக்கு மாகாணத் தமிழ்மொழித் திறன் போட்டியில் பிரிவு 01 பேச்சு நிகழ்வில் கிளி/ இராமநாதபுரம் ம.வி. மாணவன் செல்வன் ஜெயராஜா ஜெயமாருதி முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். இவருக்குரிய பரிசினை வட – கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

# உடவளவ காட்டிற்குள் ஆயுதக் குழு; தேடுதலில் 400 பேரடங்கிய போலிஸ்அணி!

(கொழும்பு)

உடவளவ சரணாலயப் பகுதியில் நடமாடிவரும் ஆயுதக்குழு ஒன்றைக் கைது செய்ய 400 பேர் அடங்கிய பொலிஸ் குழு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை காலை முதல் தேடுதலில் ஈடுபடுத்தப்பட் டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவின் விசேட பணிப்புரைக்கு அமைய ஆயுதக் கும்பலைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவின் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் கிரேடன் ஹேவா தெரிவித்தார்.

திங்கட்கிழமை மாலை 15 பேருக்கும் மேற்பட்ட குழு ஒன்று ஆயுதங்களுடன் உடவளவை காட்டிற்குள் ஊடுருவியதைப் பொதுமக்கள் கண்டுள்ளதுடன் இந்தத் தகவலை உடவளவை மற்றும் கொலன்னாவ பொலிசாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து உடவளவை காட்டின் வெளிப்புறப் பகுதிகள் எங்கும் பொலிசார் தீவிரபாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர். இந்தத் தேடுதல் நடவடிக்கையில் இரத்தினபுரி மற்றும் மொனராகல பொலிஸ் பிரிவில் உள்ள பொலிசாரே ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், ஆயுதக்குழுவைக் கண்டுபிடித்து கைதுசெய்யும் வரை காட்டுக்குள் தேடுதல் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

இந்த ஆயுதக்குழு எது என்பது குறித்து எவ்வித தகவல்களையும் அவர் வெளியிடவில்லை.

# கோட்ட தேசிய எழுச்சி பேரவைத் தெரிவு நிகழ்வு

துணுக்காய்ப் பிரதேசத்தில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு கடந்த செவ்வாயன்று பி.ப. 4. 00 மணிக்கு அனிஞ்சியன்குளம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் பிரதேசப் பொறுப்பாளர் சி. சேரன் தலைமையில் ஆரம்பமானது. தொடர்ந்து அ. அமிர்தலிங்கம், அரசியல்துறையைச் சேர்ந்த பெ. தவம் ஐயா, தேசிய எழுச்சிப் பேரவை தொடர்பான கருத்துரைகளை வழங்கினார்கள். தொடர்ந்து கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை மக்களால் தெரிவு செய்யப்பட்டது.

செயலாளராக அ. அமிர்தலிங்கம், துணைச் செயலாளராக த. சுந்தரலிங்கம். பொருளாளராக ஐ. கந்தையா, உறுப்பினர்களாக க. நகுலேஸ்வரன், பெ. சகாதேவன், திருமதி. க.விஜயலட்சுமி, சி. சுதர்சன், சொ. குகதாசன், இராமலிங்கம், சி. சண்முகநாதன், ம. செல்லமுத்து ஆகியோர் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர்.அதனைத் தொடர்ந்து மக்கள் கருத்துக்கள் இடம்பெற்றன. பதில் கருத்தினை பிரதேசப் பொறுப்பாளர் வழங்கினார்.

# பொதுமண்டபம் திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் கடந்த புதனன்று பொது மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

உடுத்துறை கிராம சேவகர் வ.தவராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறையைச் சேர்ந்த யாழ். மன்னன் ஏற்றி வைத்தார். மண்டபத்துக்கானபெயர்ப் பலகையை ஆழியவளை தியாகதீபம் திலீபன் மருத்துவமனைப்பொறுப்பாளர் செல்வி ஈழவாணி திரை நீக்கம் செய்துவைத்தார். மண்டபத்தினை வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.ப. வேலாயுதம் பிள்ளைநாடாவினைவெட்டித்திறந்து வைத்தார் அடுத்து சிறப்புரைகளை வத்திராயன் கிராம அலுவலர் ஜோசப், அரசியல்துறை யைச் சேர்ந்த யாழ். மன்னன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ் வில் பெருமளவு மக்கள் மற்றும் பொது நிறுவனங்கள்,விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (11)

# யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களின்றி நெருக்கடி!

## – வைத்தியசாலைப் பணிப்பாளர் சதுர்முகன்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறையால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சதுர்முகன் தெரிவித்துள்ளார்.**

நோயியல் நிபுணர், உயிரியல் நிபுணர், சட்ட வைத்திய நிபுணர், இதய சிகிச்சை நிபுணர், நரம்பியல் நிபுணர் ஆகியோர் உட்பட பல நிபுணர்களின் பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. அத்துடன் மரண விசாரணை அதிகாரியும் இல்லை. இதனால் மரண விசாரணைகளை மேற்கொள்ளமுடியாதுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரியும், மரண விசாரணை அதிகாரியும் இல்லாததால் யாழ். நகரில் கடந்த திங்கட்கிழமை தலையில் காயத்துடன் இறந்து கிடந்த இளைஞரின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக கண்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று பணிப்பாளர் சதுர்முகன் தெரிவித்துள்ளார்.(33)

# போரினால் இடம் பெயர்ந்தோரில் 50 வீதமானோர் குடியேறினர்

## யு.என்.எச்.சி.ஆர் அலுவலகம் தெரிவிப்பு

இலங்கையில் போரினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரில் 311202 பேர் தமது சொந்த இடங்களில் குடியேறியுள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் "புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையே இதற்குக் காரணமென அந்த அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் ஏற்பட்டபின்னர் கடந்த வருடம் வரை குறைந்தபட்சம் 613220 பேர் இடம் பெயர்ந்திருப்பதாகவும் ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் மேற்கொண்ட ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிபர்கள் கலந்து கொள்ளவும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர் களுக்கான சீருடைகள் 2003 சம்பந்தமான கூட்டம் கிளி/க்ரைச்சி பிரதேசச் செயலர் பொன் நித்தியானந்தன் தலைமையில் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்திற்கு கரைச்சிக் கோட்ட பாடசாலைகளின் அதிபர்களைத் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கரைச்சி பிரதேசச் செயலர் வேண்டியுள்ளார். (சோ)

# பொன்னாலை கண்ணதாசனின் "ஒருகணம்" வீதி நாடகம்

பூநகரியில் யுனிசெவ், வெண்புறா நிறுவனத்தின் கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்திட்டத்தின் கீழ் தமிழ் கலைமன்றம் நடாத்திவரும் பொன்னாலை கண்ணதாசனின் "ஒருகணம்" வீதி நாடகம் கடந்த செவ்வாய்கிழமை நல்லூர், வாடியாடி 4ஆம் கட்டையிலும் நடைபெற்றது. நேற்று முன்தினம் பள்ளிக்குடா ஞானிமடம், கறுக்காய்த்தீவு விணாசியோடையிலும் இடம்பெற்றது. இது பொன்னாலை கண்ணதாசனின் தலைமையில் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இவ்வீதிநாடக நிகழ்வு தொடர்ந்து ஜெயபுரம், வலைப்பாடு, முழங்காவில், நாச்சிக்குடா மற்றும் இலுப்பைக்கடவைப் பிரதேசங்களிலும் நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1936 | 2003 |
| 11 | 07 |
| 24 | 10 |



## அமரர் திரு. இளையதம்பி ஏகாம்பரம்

பாலிநகர், வவுனிக்குளம்.

**அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த ஆருயிர் தந்தையாகவும்**
**அன்பிற்கு இருப்பிடமாகவும் எமது குடும்ப ஒளிவிளக்காகவும்**
**பிரகாசித்து, காலமெல்லாம் கண் அயராது**
**தந்தைக்குத் தந்தையாய் நின்று வளர்த்து ஆளாக்கிய**
**அன்புத்தெய்வமே! உம் பிரிவால் துயருறும் யாம்**
**எம் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.**
**எமது வாழ்நாள் தோறும் உங்கள் இனிய நினைவுகள்**
**எம்மைவிட்டு ஒருபோதும் அகலாது.**

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, 09-08-2003 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியை நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்
**மனைவி,பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

பாலிநகர்,
வவுனிக்குளம். (3615)

# அரச பாடசாலைகளில் சேவையாற்ற 1750 பேருக்கு ஆசிரிய நியமனம்

அரச பாடசாலைகளில் சேவையாற்ற 1750 ஆசிரிய நியமனம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சகல மாகாணங்களையும் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுமென கல்வியமைச்சுத் தெரிவித்துள்ளது. இவர்களில் 500பேர் விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம், சுகாதாரம், சமூகக்கல்வி என்பனவற்றை ஆங்கிலத்தில் போதிப்பதற்கெனத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஏனைய 1250 ஆசிரியர்களும் உயிரியல், பௌதீகவிஞ்ஞானம், வர்த்தகம், கலை, சங்கீதம், நடனம் மற்றும் ஆங்கிலம் என்பனவற்றை கற்பிப்பர். 35வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தினமுரசு பத்திரிகைகள் தீ வைத்து எரிப்பு

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்ட தினமுரசு பத்திரிகைப் பிரதிகள் கடந்த புதன்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபர்களால் பறிமுதல் செய்யப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டன.

மேற்படி பத்திரிகையை எடுத்துச் சென்ற தனியார் பேருந்தை வாழைச்சேனை சுங்கான்கேணியில் அதிகாலை 4.00 மணியளவில் வழிமறித்த ஆயுதபாணிகள் அதிலிருந்த பத்திரிகையை தீ வைத்து எரியூட்டினர்.

மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி.யின் அலுவலகம் ஊடாகவே இப் பத்திரிகை விநியோகம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் சமாந்தரமாகச் சென்ற 4 பேருக்கு நீதிமன்றம் அபராதம்

(அலுவலக செய்தியாளர்)

வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக சமாந்தரமாகப் பயணித்த நால்வர் மீது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று தலா 250 ரூபா வீதம் குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

நேற்று கிளி. நகரப் பகுதியில் வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டி ஆகியவற்றில் சமாந்தரமாக பயணித்த நான்கு பேரை வழி மறித்த வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணைகளை மேற் கொண்டு வீதியால் பயணிப்பதற்கான ஒழுங்கு விதிகள் பற்றி விளக்கமளித்த பின்னர் கிளி.மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோதே மாவட்ட நீதிமன்ற நீதியாளர் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளார். (லோ)

# உதைபந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

உருத்திரபுரம் சனசமூக நிலையத்தினரால் உதைபந்தாட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

ஒரு விளையாட்டுக் கழகத்திலிருந்து ஒரு பிரிவு மட்டுமே விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற முடியுமெனவும் விளையாட்டில் பங்குபற்றும் 11 வீரர்களும் கண்டிப்பாக காலணிகள் அணிந்திருத்தல் அவசியமெனவும், விண்ணப்ப முடிவுத் திகதி 15.08.2003 என தெரிவித்துள்ளதுடன் மேலதிக விபரங்களுக்கு உருத்திரபுரம் சனசமூக நிலையத் தலைவர் இ.மு.சண்முகராசாவுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளனர். (சோ)

# வவுனியா வடக்கு கல்விவலயத்தில் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் ஆங்கில ஆசிரியர்களுக்குக் கடும் பற்றாக் குறை நிலவுகின்றது. இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "வவுனியா வடக்கு கல்விவலயத்தில் 83 பாடசாலைகள் உள்ளன. இப்பாட சாலைகளில் பெருமளவான மாணவர்கள் கல்விகற்கின்றனர். இவர்களுக்குக் கற்பிப்பதற்கென ஐந்நூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் இந்த மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் அழகியல் பாடங்களை எம்மால் சரியான முறையில் கற்பிக்க முடியவில்லை. எமது வலயத்தில் ஆங்கில பாடம் கற்பிப்பதற்கு மூன்று நிரந்தர ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்" என வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வீ.ஆர்.ஏ.ஒஸ்வெல்ட் தெரிவித்தார்.

இந்நிலைகள் தொடர்பாக கல்வி அமைச்சுக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்களே இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இம்மாவட்ட பாடசாலைகள் பலவற்றில் வெளிமாவட்ட ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு விடுதி வசதி இன்மையால் வகுப்பறைகளில் தங்கவேண்டிய நிலை உள்ளது. ஆசிரியைகளுக்குக்கூட இதே நிலை தான். இது பற்றி வலயக் கல்விப்பணிப்பாளரிடம் கேட்டபோது, பல பாடசாலைகள் முற்றாகவே அழிக்கப்பட்டுள்ளன. அனைத்தையும் ஆரம்பத்திலிருந்தே தொடங்கவேண்டியுள்ளது. இதனாலேயே இந்நிலை எனத் தெரிவித்தார்.

# புதிய சற் புள்ளியிடல் முறை; ஆராய்கிறது உயர்கல்வி அமைச்சு

(கொழும்பு)

இந்த வருடத்திலிருந்து க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுக் கொள்கின்ற புள்ளிகளுக்கேற்ப புதிய சற் புள்ளியிடல் முறை நடைமுறைப்படுத்தப் பட இருக்கின்றது.

இது தொடர்பான கருத்துக்களை திரட்டுவதற்கு, பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தும் திட்டம் குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

சற் புள்ளி முறையில் உள்ள முரண்பாடுகளை ஆராய நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவின் சிபார்சுகளுக்கேற்ப இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக உயர் கல்வி அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இத்தெரிவுக்குழு க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் புள்ளி வழங்கும் திட்டத்தை சிபார்சு செய்துள்ளது.

பழைய சற் புள்ளியின் தெளிவின்மை காரணமாக முரண்பாடுகள் ஏற்பட்டன. இதனை இந்த புதியமுறை நிவர்த்தி செய்யும் என நம்பப்படுகின்றது.

இந்தப் புதிய முறை க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகள், மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் நடைமுறைப் படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# தென்பகுதி இளைஞர்களும் கண்ணிவெடி அகற்ற இணைப்பு

(கொழும்பு)

வடக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் தென்பகுதி இளைஞர்களையும் இணைத்துக் கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளில் வெளிநாட்டவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தென்பகுதி இளைஞர்களுக்கு கண்ணிவெடிகளை அகற்றும் பயிற்சிகளுக்கான நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் அரசாங்க ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.



## சிந்தனைக்கு

சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது!

தமிழீழத் தேசியத்தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 09-08-2003

## குற்றவாளிகள் போன்று...!

பிரிட்டனுக்கான விசாப் பெறுவதற்கு இலங்கையர்கள் கைவிரல் அடையாளம் பெறுதல் வேண்டும் என்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிவிப்பானது, சிறிலங்காவில் எதிர்க்கட்சிகளின் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. இதனால், பாராளுமன்றத்தில் பெரும் அமளிதுமளியும் ஏற்பட்டுள்ளது. அதேசமயம், இந்நடைமுறைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் ஒன்றும் செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கம் தமது நாட்டிற்குள் சட்டவிரோதமாக நுழைவோரைத் தடை செய்வதாகக் கூறிக்கொண்டு மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாடானது சரியானதொன்றே. ஏனெனில், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இந்நடவடிக்கை சட்டவிரோத குடியேற்றக்காரர்களைக் கட்டுப்படுத்தவென மேற்கொண்டதாயினும், இது இலங்கை மக்களைச் சிறுமைப்படுத்தும், கேவலப்படுத்தும் நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கது.

அதிலும் குறிப்பாக, இலங்கையருக்கென இந்நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளமையானது, இலங்கை மக்களின் சுயகௌரவத்தை இழிவுபடுத்தி அவர்கள் ஒரு குற்றவாளிகள் போன்று நடத்துவதாக அமைகின்றது. பிரிட்டனில் சட்டவிரோதமாகக் குடியேறுவோரை அந்நாடு கட்டுப்படுத்த முனைவது அதன் சொந்த விடயம். ஆனால், விசாப் பெறுவோரின் கைவிரல் அடையாளம் பெறுவது வேறு விடயம். இலங்கையில் உள்ள பிரஜைகள் எவருமே கௌரவமானவர்கள் அல்ல என்பது போன்றதாகும் இது.

பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாகக் குடியேறுவோரை உடன் திருப்பி அனுப்ப பிரிட்டன் நடவடிக்கை எடுக்கட்டும். அது அந்நாட்டின் அரசியல் தீர்மானம் அன்றிக் கடும் சட்டங்கள் மூலம் கட்டுப்பாடுகளை விதிக்கட்டும் அது வேறு விடயம். ஆனால், நேர்மையாகவும், கண்ணியமாகவும் நுழைய முனைபவர்கள் இடத்து கைவிரல் அடையாளம் பெறுவது இலங்கையரின் சுயகௌரவத்தை கேள்விக்குரியதாக்கும்.

பிரிட்டனுக்கு, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் - குறிப்பாக பிரிட்டனின் முன்னைய காலனி நாடுகள் யாவற்றிலும் இருந்து பிரிட்டனுக்குள் நுழைந்துவிடப் பலர் விரும்புகின்றனர். இந்த வகையில் இலங்கையரும் அதில் அடங்குகின்றனர். ஒப்பீட்டு ரீதியில் உள்நுழைய முனைபவர்களில் இலங்கையர் சற்று அதிகம் என்றே கூறுதல் வேண்டும். ஆனால், இதற்காக இலங்கையரை இழிவுபடுத்தும் சட்டங்களைக் கொண்டுவருதல் ஏற்புடையதொன்றல்ல.

இதேவேளை, இலங்கையர்கள் இன்று பெருமளவில் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கும், அவர்கள் மேற்கு ஐரோப்பாவில் குறிப்பாக பிரிட்டனில் புகலிடம் கோருவதற்கும் நாட்டின் இன்றைய அரசியல் - பொருளாதாரச் சூழ்நிலைகள் காரணமாக இருக்கலாம். ஆனால், இத்தகையதொரு சூழ்நிலை உருவாவதற்கு பிரிட்டன் ஆகவும் காரணம் என்பதை எவருமே நிராகரிப்பதற்கு இல்லை.

இலங்கையைப் பிரிட்டன் தனது குடியேற்ற நாடாக்கியதன் மூலம் இலங்கையின் வரலாற்றுப் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஒருபுறத்தில் தனது நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காக இலங்கைத்தீவை ஒரு நிர்வாக அலகாக்கியது. இதன் மூலம் பல அரசுகளாக இருந்த இலங்கைத்தீவு ஒரு அரசு என்ற நிலைக்கு மாறியது. இது இலங்கையில் இன்று நடைபெறுகின்ற இன முரண்பாட்டிற்கு அடிப்படையானது.

இதேவேளை, இலங்கையில் வழக்கில் இருந்த ஆட்சி முறையை ஒழித்து, சனநாயக ஆட்சிமுறையைப் புகுத்தியது. சனநாயக ஆட்சி முறை மேம்பட்டதோ இல்லையோ பெரும்பான்மையினர் ஆட்சி என்ற ரீதியில் சிங்களவரிடம் ஆட்சி அதிகாரம் சென்றுசேர சிறுபான்மை இனங்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாக வேண்டி வந்தது. இதன் காரணமாக சிறுபான்மை இனமான தமிழ் மக்கள் தமது உரிமைக்காக ஆயுதப் போராட்டத்தை நடத்த வேண்டியதாகியது.

இதற்கு அடுத்ததாக, இலங்கையில் இருந்த சுயபொருளாதார ஒழுங்குமுறையை இல்லாது ஒழித்து, தமக்கு இலாபம் ஈட்டும் வகையிலான பொருளாதாரத்தைப் பிரிட்டன் அறிமுகம் செய்தது. இது இலங்கையின் பொருளாதாரத்தையே கேள்விக்குள்ளாக்கியதோடு, முற்றிலுமாகத் தங்கி வாழும் ஒரு சூழ்நிலை உருவாகியது. இதனால் வறுமை, வேலை வாய்ப்பின்மை என்பன பெரும் பிரச்சினைகளாகின.

இவைதான் ஒருபுறம் இருக்க, சுதந்திரத்தின் பின்னரும்கூட பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசால் விடுபட முடியவில்லை. ஏனெனில், சர்வதேச வர்த்தகம் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு வாய்ப்பானதாக இருக்கவில்லை. சர்வதேசச் சந்தை என்பது வளர்ச்சி கண்ட முதலாளித்துவ நாடுகளுக்கு சாதகமானவையாகவே உள்ளன. இது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அவர்களினால் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இல்லை.

இந்நிலையில், இலங்கை போன்ற நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து செல்பவர்கள் குற்றவாளிகள் போன்று நடத்த முனைவது ஏற்புடையதொன்றல்ல. இன்று உலகில், மூன்றாம் உலக நாடுகள் என்ற ஒரு தொகுதி உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்கள் முன்னைய காலனித்துவ ஆட்சியாளர்களே. அதாவது முதலாம் உலக நாடுகள் எனப்படும் முதலாளித்துவ நாடுகளே இன்று குற்றவாளிகள்போல் இலங்கை போன்ற அன்றைய காலனித்துவ நாட்டு மக்களை நடத்த முனைவதானது தம் மக்களின் அடிப்படை உரிமைகளை அவர்கள் அன்றுபோல் மதிக்காதது மட்டுமல்ல, தமது தார்மீகப் பொறுப்பைப் புறந் தள்ளுவதாகவே இருக்கும்.

# அரசியல் பழிவாங்கல்கள், வன்முறைகளை கண்காணிக்கும் குழு சிறிலங்கா வருகிறது!

அரசியல் பழிவாங்கல்கள், தற்போது நாட்டில் நடைபெறும் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கு 12 பேர்கள் அடங்கிய குழுவொன்று அடுத்த மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு வர உள்ளது.

இதில், இந்தியா, ஆபிரிக்கா, கென்யா, ஜப்பான், அமெரிக்கா ஜேர்மன், நாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் வடகிழக்கு, தென்பகுதிகளில் தற்பொழுது நடைபெற்று வரும் அரசியல் பழிவாங்கல்கள், பயங்கரவாத செயல்களைப் பரிசீலனை செய்வார்கள்.

ஒன்றரை வருடங்கள் யுத்தநிறுத்தம் ஏற்பட்டும், தற்பொழுது யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினால் இச்சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியாமல் போயிற்று.

அரச பயங்கரவாத சம்பவங்களைப் பார்க்கும்பொழுது நாட்டில் அதிகமான குற்றச் செயல்கள் மாத்தறை மாவட்டத்தில் நடந்துள்ளது. வடக்கு கிழக்கு உட்பட 24 மாவட்டங்களில் கிளைகள் ஏற்படுத்தி 3000 ஊழியர்களை நியமிப்பதற்கு இந்தக் கமிட்டி உத்தேசித்துள்ளது என கமிட்டியின் இணைப்பதிகாரி வில்லியம் நோக்ஸ் அறிவித்துள்ளார்.

# சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக மொறகொட பெனாண்டசிற்கு விளக்கம்!

(கொழும்பு)

இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள மொறகொட இலங்கையின் தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக நேற்று முன்தினம் இந்திய பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெனாண்டசை சந்தித்து உரையாடிய போதே இவ்விடயம் பற்றி விளக்கியுள்ளார்.

இலங்கையில் மேற் கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை அவ்வப் போது இந்திய அரசிற்குத் தெளிவு படுத்தும் ஓர் அம்சமாகவே பெனாண்டசிடம் அதுபற்றி விளக்கப்பட்டுள்ளது. மேலும் திலக் மாரப்பன சார்பில் இலங்கைக்கு வருகை தருமாறு மொறகொட விடுத்த அறிவிப்பை இந்திய பாதுகாப்பமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்தியாவின் முக்கிய அமைச்சர்கள் சிலரை மொறகொட சந்திக்கவுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர் அத்துமீறலைத் தடுக்காது அரசாங்கம் பாராமுகமாக செயற்படுகிறது

## அமைச்சர் மகேஸ்வரன் குற்றம் சாட்டுகிறார்

வடபிராந்திய கடல் எல்லையில் இந்திய மீனவர்கள் அததுமீறி மீன்பிடித்துவருகின்றனர். இந்திய அரசைப் பகைத்துக்கொள்ள விரும்பாத அரசாங்கம் பாராமுகமாகவே இருந்துவருவதாக இந்து கலாச்சார அமைச்சர் மகேஸ்வரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

இது விடயத்தில் அமைச்சர் தனது உரையில், மேலும் கூறுகை யில் இந்திய மீனவர்கள் நவீன மீன்பிடி வள்ளங்களைப் பயன்படுத்தி இலங்கைக் கடல் எல்லையில் அத்துமீறி, சட்டவிரோதமாக மீன்பிடிக் கிறார்கள். இதனால் வடபகுதி மீனவர்களின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களின் வலைகளை அறுத்து வருவதுடன் மீனவர்களின் பொருட்களையும் அபகரித்துச் செல்கிறார்கள். இது குறித்து அரசின் கவனத்திற்குப் பல தடவைகள் கூறப் பட்ட போதும் அரசு எவ்வித முடிவும் எடுக்கவில்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

# டோக்கியோவில் கிடைத்த உதவிகளை அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்துவோம்

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

டோக்கியோ மாநாட்டில் கிடைத்த உதவிகளை அர்த்தமுள்ளவகையில் பயன்படுத்துவதற்கு அரசு சீரான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்காகப் பிரதமரின் ஆலோசனையுடன் விசேட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கொள்கைத்திட்டமிடல் அமைச்சுக்கும், ஏனைய அமைச்சுகளுக்குமிடையிலான ஒருங்கிணைப்பு மேலும் வலுப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார். நேற்றுக்காலை கொழும்பு பண்டாரநாயக்க மண்டபத்தில் ஆரம்பமான உணவு பதப்படுத்தல் தொடர்பான கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் அமைச்சர் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்துள்ளார். கைத்தொழில்துறையின் அபிவிருத்திக்காக 17 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சீருடைக்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டிற்கான சீருடை விநியோகத்திற்கென 75 கோடி ரூபாவை அமைச்சரவை ஒதுக்கியுள்ளது.

கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைச் கூட்டத்தின் போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் கபடிப் பயிற்சி முகாம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுச் சபையின் அனுசரணையுடன் கபடிப் பயிற்சி முகாம் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் 17ஆம் திகதிகளில் கிளிநொச்சி ம/வியில் நடைபெறவுள்ளது. கிளிமாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள கபடிப் பயிற்சி முகாமிற்கு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த 25 உறுப்பினர்களும்,15 ஆசிரியர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இறுதிநாள் நிகழ்வில் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் கலந்து பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர். (சோ)

## முன்னேற்றம்

ஜேர்மனியில் டோன்மான் நகரில் நடைபெறும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் தொடர்ந்து வெற்றி பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆறாவது சுற்றில் இவர் 36வது காய் நகர்த்தலில் வொன்டோவியா நாட்டின் விக்போலாகனை வென்றுள்ளார்.

இந்தப் போட்டியில் ஆனந்திற்கு இது இரண்டாவது வெற்றியாகும்.

# ஆழியவளை சி.சி.த.க பாடசாலை வெற்றி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கிடையே 17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி (உடுத்துறை ம.வி எதிர் ஆழியவளை சி.சி.த.க பாடசாலைகள்) கடந்த வெள்ளியன்று மாலை 3.00 மணிக்கு வத்திராயன் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இதில் ஆழியவளை இ.கி.த.க பாடசாலை உடுத்துறை ம.விக்கு 2 கோல்களைப் போட்டு, வெற்றிபெற்றுக்கொண்டது.

அடுத்து உடுத்துறை மகாவித்தியாலயத் தெரிவு அணிக்கும், உதயசூரியன் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையேயான சிநேகிதபூர்வமான உதைபந் தாட்டம் இடம் பெற்றது. இதிலும் உடுத்துறை ம.வி தெரிவு அணி தோல்வியைச் சந்தித்தது. வத்திராயன் உதயசூரியன் அணி உடுத்துறை ம.வி.அணிக்கு இரண்டு கோல்களை அடித்தது. இவ்விரு விளையாட்டுக்கும் நடுவராக வடமராட்சி கிழக்கு விளையாட்டு உத்தியோகத்தர் முகுந்தன் கடமையாற்றினார்.



-தெல்லிப்பளை யூனியன் கல்லூரி-

# கோவிலைப் புனரமைப்புச் செய்ய சிறிலங்காப் படையினர் தடை

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வளாகத்தினுள் அமைந்துள்ள ஆலயத்தில் பூசைகளைச் செய்து வழிபாடுகளைச் செய்வதற்கு மாணவர்களை இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

மேற்படி கல்லூரி வளவினுள் அமைந்துள்ள புவனேஸ்வரி ஆலயம் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதுடன், கல்லூரியில் பல ஆண்டுகளாக இராணுவத்தினர் குடியிருந்ததினால் விக்கிரகங்களும் சிப்பக் கதவுகளும் அடித்துநொருக்கப்பட்டுள்ளது. அத்துடன் இங்குள்ள ஐம்பொன் விக்கிரகங்கள் பல காணாமல் போயுள்ளன.

இதனையடுத்து அக் கோவிலைப் புனரமைப்புச் செய்து வழிபாடு செய்யப் பாடசாலை இந்துமாமன்றம் முயற்சி செய்தது. ஆனால் இக் கோவிலைப் புனரமைப்புச் செய்யும் கட்டடக்காரர்களையும், மரவேலைக் காரரையும் இப் புனர்நிமாண வேலைகளைச் செய்யவிடாது இராணுவத்தினர் தடுத்துள்ளதால் இவ்வாலயம் இன்றுவரை திருத்தப்படாதுள்ளது. (33)

-நெடுங்கேணி அ.பு.கழகத்தால்-

# 72 மலசல கூடங்கள் 12 கிணறுகள் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் போருட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நெடுங்கேணிப் பகுதியில் 72 மலகூடங்கள் அமைத்திருப்பதாக நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவித்தனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்ந்த மக்களின் சுகாதார வசதிகளைக் கருத்திற் கொண்டு பெரிய மடு,நயினாமடு, சன்னாசிப் பரந்தன் ஆகிய பகுதிகளிலேயே 72 மலகூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நியாப் திட்டத் துடன் இணைந்து 12 குடிநீர்க் கிணறுகளையும் இந்நிறுவனம் அமைத்துள்ளது. சின்னடம்பன் பகுதியில் மூன்று கிணறுகளும், மாறா இலுப்பைக்குளம் பகுதி யில் இரண்டு கிணறுகளும், இராசபுரம் பகுதியில் ஒரு கிணறும், குளவிசுட்டான் பகுதியில் ஒரு கிணறும், நெடுங்கேணிப் பகுதியில் மூன்று கிணறுகளும், விஞ்ஞான குளம் பகுதியில் இரண்டு கிணறு களையும் என மொத்தமாக- 12 கிணறுகளை நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து மக்கள் பாவனைக்காகக் கையளித் துள்ளது.

இது போன்ற மக்களுக்கான அடிப்படை வசதிகளை இந் நிறுவனம் தொடர்ந்தும் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

## தேசிக்கன்றுகள் விநியோகம்

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில ஆனந்தபுரம் கமக்காரர் அமைப்புப் பிரிவில் 41 குடும்பங்களுக்குத் தலா ஐந்து வீதம் இருநூற்று ஐந்து (205) நல்லின தேசிக்கன்றுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டன. (26)

## 21ஆம் திகதி பயிற்சி ஆரம்பம்

(பூநகரி)

எதிர்வரும் 21.08.2003 அன்று அத்தாய தொழில்நுட்பக் கல்லூரிக் கிளையில் தச்சு வேலைப்பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சிக்கு 35 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுக்குழு தெரிவு

(பூநகரி)

கடந்த 06.08.03 புதன் கிழமை பூநகரிப் பிரதேச செயலகத்தில் செயலர் க.வைரமுத்து தலைமையில் பிரதேச விளையாட்டுக் குழுத் தெரிவு இடம்பெற்றது.

இத் தெரிவுக் கூட்டத்தில் பல கழகங்கள் பங்குபற்றின என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓட்டிகள் இருவரைத் தவிர 8 மீனவரை விடுவிக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்பட்ட பத்து இந்திய கடற் றொழிலாளர்களில் எட்டு கடற்றொழிலாளர்களை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருப்பதாக பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்கள் வடமராட்சி வடக்கில் உள்ள இன்பருட்டி கடற்பகுதியில் அத்துமீறி பிரவேசித்து மீன் பிடித்துக்கொண்டிருந்த போது கடந்த புதன் நள்ளிரவு வடமராட்சி கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்பட்டனர்.

நீதி மன்றத்தின் உத்தரவுக்கு அமைய இரண்டு வள்ளங்களும் அதனைச் செலுத்தி வந்த ஓட்டிகள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய எட்டுப் பேரும் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸ் அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

- உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை -

# 81.5 கிலோ மீற்றர் நீளக்கடற்கரை மீன் பிடித்தலுக்கு முடியாத நிலை

யாழ்குடா நாட்டில் 81.5 கிலோ மீற்றர் நீளமான கடற்கரைப் பரப்பு இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்களின் மீள்குடியமர்வுக்கும், இயல்பான கடற்றொழிலுக்கும் இடையூறாக இருப்பதாகச் சர்வதேசத் தமிழீழ மாணவரமைப்பால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது.

இத்தகைய பாதுகாப்பு வலயத்தில வலி வடக்கு, அரியாலை, தென்மராட்சி கிளாலி, நாகர் கோவில், மண்டை தீவு ஆகிய கடற்கரைப் பிரதேசங்களைச் சேர்ந்த 4436 மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த 20 ஆண்டு கால யுத்தத்தால் இடம்பெயர்ந்த 16 பாடசாலைகள் 246 ஆலயங்கள் அடங்கலாகவுள்ள 67 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள நிலப்பகுதி ஆள் நடமாட்டம் அற்று உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதிக்குச் சொந்தமான இன்றும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது அகதி முகாங்களில் மிகவும் நெருக்கடியுடன் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (33)

# இருதார மணம் முடித்தவருக்கு ஏழு வருட கடூழியச் சிறை

(வடமராட்சி)

சட்டவிரோதமான முறையில் இரண்டு பதிவுத் திருமணங்களைச் செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவருக்கு ஏழு வருட கடூழியச் சிறைத் தண்டனையை பருத்தித்துறை நீதிமன்று நேற்று வழங்கியுள்ளது.

வல்வெட்டித்துறை அமரபாகு பாகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படும் மேற்படி இளைஞர் முன்னர் குறிப்பிட்ட ஓர் யுவதியை பதிவுத் திருமணம் செய்திருந்ததாகவும், பின்னர் இது தொடர்பாக அறிவிக்காது மற்றுமோர் யுவதியைப் பதிவுத் திருமணம் செய்திருந்த நிலையில் முதலாவது மனைவியால் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கினை அடுத்து இவர் மீதான வழக்கு விசாரணை நடைபெற்றது.

இவர் பதிவுத் திருமணம் செய்து கொண்டது தொடர்பான புகைப்படங்களை ஆவண ரீதியாக இருவரும் சமர்ப்பித்ததை அடுத்து இவருக்கு ஏழு வருட கடூழியச் சிறைத் தண்டனையை நீதவான் க.அரியநாயகம் விதித்துள்ளார். (27)

- யாழ்.குருநகர்ப்பகுதியில் -

# மர்மமான முறையில் காணாமற்போன சிறுவனை மீட்டுத்தர முறையீடு

மர்மமான முறையில் காணாமல் போயுள்ள 14 வயதுச் சிறுவனைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவின் யாழ்.மாவட்டச் செயலகத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதியிலிருந்து காணாமற் போன யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த நிசாந்தன் என்ற சிறுவன் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்குச் சென்றதிலிருந்து காணாமற் போயுள்ளார். இது தொடர்பாக மேற்படி சிறுவனைக் கண்டு பிடித்துத் தருமாறு அவர்களது உறவினர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க யாழ்.மனிதவுரிமை ஆணைக்குழுவினர் இச்சிறுவனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இச்சிறுவனை கண்டவர்கள் யாழ். மனிதவுரிமை பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (33)

## முன்னாள்துணைவேந்தர் அருட்பிரகாசம் காலமானார்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் கே.டி.அருட்பிரகாசம் தனது 72ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு தோமஸ் கல்லூரியிலும் பின்னர் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்ற இவர் பின்னர் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும் கொழும்பு ஆனந்தா கல்லூரியிலும் கல்வி கற்றிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விலங்கியல் பட்டப்படிப்பை முடித்த பின்னர் தனது முதுமானிப் பட்டத்தை லண்டனில் பெற்றார். கல்வி சேவைகள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவராக இருந்த இவர் பல்கலைக் கழகமானிய ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் சேவையாற்றியிருந்தார்.

## வைத்தியசாலை மீள ஆரம்பம்

ஆயுர்வேத வைத்திய அதிகாரி பதவி நீண்ட காலம் வெற்றிடமாக இருந்தமையால் செயற்படாதிருந்த கனகராயன்குளம் ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரி கணபதிப்பிள்ளை ஐங்கரன் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் முதலாம் திகதி முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

### மலேரியா...

சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்தக் கொசுவலை மக்கள் உபயோகத்திற்கு வரும் என சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### குரங்கு...

நாங்கள் சிறிலங்கா அரசிடமும், நோர்வே அரசிடமும் தெரிவித்து விட்டோம்.

இந்த ஒரு விவகாரத்தில் மட்டுமே கண்காணிப்புக்குழுவின் எதிர்காலம் தங்கியிருக்கவில்லை.ஆனால் இது மிக மிக முக்கியமான தீவிரமான விடயம். போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கண்காணிக்க நாங்கள் இங்கே இருக்கின்றோம். இதில் பிரச்சினை என்னவென்றால் நாங்கள் தீர்ப்பு வழங்கும் போது சம்பந்தப்பட்ட தரப்பினர் அதை ஏற்க மறுப்பதுதான்.

எனவே இரு தரப்பினரும் அமர்ந்து பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றார்.

### விசா காலா...

களையும் கைதுசெய்து நேற்று மாலை கல்முனை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவர்களில் ஒருவரை பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் ஏனைய 14 பேரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

குடியகல்வு குடிவரவு சட்டத்தின் 45வது பிரிவின் கீழ் விசா அனுமதியின்றி தங்கியிருந்ததாக இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### சமாதான..

வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாக சபைக்கு மாற்றீடாக அரசாங்கம் முன்வைத்திருக்கும் தற்காலிக நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து விடுதலைப்புலிகளின் சட்டநிபுணர்கள் நடத்தவிருக்கும் ஆலோசனைக் கூட்டம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இட்டுச் செல்லும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

### நூர்தீன்...

தொடர்பில் முஸ்லிம்களின் சார்பில் பொதுவான திட்டம் ஒன்று முன் வைக்கப்பட வேண்டும் எனவும் அத்தகைய திட்டம் குறித்து பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாகவும் அதில் இணக்கம் ஏற்படும் இடத்து இவர்கள் இருவரும் முஸ்லிம் காங்கிரசில் இணைந்து கொள்வோம் என்று அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

### கடற்...

நெருக்குவாரங்களை உருவாக்கி அவர்களது இயல்பு வாழ்க்கையை குழப்பியுள்ளனர். இப்படியாக சிறிலங்காக் கடற்படையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் கூட எம்மை நசுக்க முனைவதை எம்மால் உணரக் கூடியதாகவுள்ளது. இதனால் எமது உரிமைகளையும் வளங்களையும் பாதுகாத்துத் தருவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. ஏனெனில் கடந்த கால வரலாற்றில் சிறிலங்காக் கடற்படை எம்மைப்பாதுகாத்ததாக வரலாறில்லை. கலைத்துக் கலைத்து வெட்டிக் கொன்றதையும், சுட்டதையும் சித்திரவதை செய்ததையும் எம்மினம் என்றுமே மறக்காது. இதற்குக் குருநகர்ப்படுகொலை, கிளாலிப் படுகொலை, குமுதினிப்படகு படுகொலை என்பன சான்றுகளாக அமைகின்றன.

எம்மைப்பாதுகாக்கக் கூடிய தமிழீழ புலிப்படையினரின் கடற் கண்காணிப்பைபோர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தடைவிதித்திருப்பதால் எம்பிரதேசத்தில் இவ்வாறான அத்து மீறல்கள் தொடர்கின்றன. எனவே விடுதலைப்புலிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதன் ஊடாக எம்மீது திணிக்கப்படுகின்ற இத்தகைய அத்துமீறல்களைக் குறைக்க முடியும் என்றும் எம்மீது தியாக உணர்வுள்ள விடுதலைப்புலிகளில் எமக்கு 100 வீதமான நம்பிக்கையுண்டு, இந்திய அரசும், இலங்கையரசும் கச்சதீவுக் கடற்பரப்பைக் குத்தகைக்குக் கொடுக்கும் விடயத்தில் நடந்துகொள்கின்ற முறைமை தொடர்பாக தான் தனது மனவருத்தத்தை யாழ்.மீனவர்கள் சார்பாகத் தெரிவிப்பதாகவும் கூறினார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் சர்வதேச மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற தமிழீழத்தின் கடல் வளங்களும் மீனவர் எதிர் கொள்ளும் சவால்களும் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் குகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்பின் துணைப்பொறுப்பாளர் மணிவண்ணன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார் (33)

### வரலாற்றில்...

தமக்கு அறிவிக்கத் தவறிவிட்டார் என்று சனாதிபதி கொழும்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் அமைப்பினர் ஒழுங்கு செய்த கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் எது கையளிக்கப்படினும் நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டும். யுத்தநிறுத்த காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அதன் இராணுவ மற்றும் குழு அதிகாரங்களைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது.

முன்னர் விடுதலைப்புலிகளிடம் 600 உறுப்பினர்களே இருந்தனர். இந்த எண்ணிக்கை இப்பொழுது 16000 ஆக அதிகரித்துள்ளது. பிரதமர் இந்த உண்மையைத் தாமே ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் இது தொடர்பாகக் கேட்ட போது இவ்விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டாம் என்று கூறினார் என்றும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் 1 1/2 ஆண்டுகளாகப் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறது. இதனால் எந்த ஒரு பலனும் கிடைக்கவில்லை என்றும் சமாதானப் பேச்சுக்கள் வீண்விரயமாகி உள்ளன என்றும் கூறியுள்ளார்.

பிரதமரால் நாட்டை நிர்வகிக்க முடியவில்லை. தேர்தலின் பின்னர் 12 ஆவது தேர்தலிலேயே மிகவும் கஸ்டப்பட்டு வெற்றிபெற்றுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் மற்றுமொரு தேர்தலை எதிர் நோக்கத் தயாராக உள்ளனர். அதனால் பிரதமர் தோல்வியைத் தழுவ வேண்டும் என்ற அச்சத்தினால் அதிலிருந்து பின்வாங்குகின்றார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் அநேகமானவை தற்போதைய ஆட்சிக் காலத்தில் தடைப்பட்டுள்ளது. தாம் நிறைவேற்று அதிகாரங்களைப் பூரண படுத்துவதாக குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் அவ்வாறு அதிகாரத்தைப் பயன்படுத்தும் விதத்தில் முட்டாளாக இல்லை என்றும் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சூழல் சீரான முறையில் மாற்றியமைக்கப்படுகையில் தாம் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்துவார் என்று குறிப்பிட்ட சனாதிபதி தற்சமயம் அச் சூழல் கட்டி எழுப்பப்படுகிறது என்றும் கூறினார்.

அரசாங்கத்தின் திட்டங்களை எதிர்த்து வீதியார்ப்பாட்டங்களைத் தாம் ஆரம்பிக்கப் போவதாகவும், நாட்டின் மீது அபிமானம் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் எவ்வித பாரபட்சமுமின்றி இத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.